LIBRARY
27 APR 1961
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 7th September 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—FELICITATIONS TO HON. SPEAKER.

THE HON. SRI C. SUBRAMANIAM: Before we proceed I would like on behalf of the House to extend to you our felicitations on your 61st birthday. (Cheers.) We hope and trust and pray that you will have a long, healthy and useful life of service to the Nation and particularly continued service to this House.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அவைக்கு வழிகாட்டக்கூடிய தலைவர், நிதி அமைச்சர் அவர்கள் கூறிய வாழ்த்துக்களோடு நானும் கலந்துக் கொள்ளப் பிரியப்படுகிறேன். தங்களுக்கு 60 வயது பூர்த்தியானதாகவே நாங்கள் நம்ப முடியவில்லை. தங்களுடைய சுறுசுறுப்பு, அதுவும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே தாங்கள் காட்டக்கூடிய விழிப்புணர்ச்சி, இதையெல்லாம் பார்க்கும்போது, தங்களுக்கு 60 வயது ஆனதாகவே கருத முடியவில்லை. தாங்கள் இன்னும் வாலிபமாகவே இருக்கிறீர்கள். வாலிபமாக இருந்து 60-வயது பூர்த்தியாகி 61-வது வயதில் இருக்கும் தினத்தில் ஏற்படக்கூடாத சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்துத் தாங்கள் உற்சாகந்தான் அடைவீர்கள் என்று நம்புகிறேன். உரிய சந்தர்ப்பத்தில் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் கூறிய வாழ்த்துக்களிலே நானும் கலந்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவையின் முதல்வர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள், தாங்கள் நீண்ட நாள் வாழ்ந்து இந்த அவைக்கு நல்ல சேவை செய்வதோடு நாட்டுக்கும் சிறந்த தொண்டு புரிய வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதே கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். நீங்கள் இந்தச் சபையை நல்ல முறையிலே நடத்தி எங்களுக்கெல்லாம் பெருமையையும் பூரிப்பையும் தேடித் தந்திருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இந்தச் சபையின் கௌரவம் நீடிக்க, தாங்கள் நீடுழி வாழ்ந்து எங்களுக்கு வழி காட்டவேண்டுமென்று எங்களுடைய விருப்பத்தை என் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Hon. Leader of the House and hon. Members, I am indeed overwhelmed by the affection shown by all of you on the occasion of my 61st birthday. While on the one hand I feel sorry that I am getting old, on the other hand I feel

[Mr. Speaker] [7th September 1960

enthusiastic and happy over the fact that many friends here, some of whom are older than me, are wishing me well. I am grateful to you all for the expression of felicitation that you have offered to me. Let me pray to God to give me strength to fulfil your expectations and do what I can to this House, to this country and to this Nation. Thank you.

II.—POINT OF INFORMATION *re* PRIVILEGE OF THE HOUSE.

SRI N. R. THIAGARAJAN : ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், சபையில் கேள்விகள் ஆரம்பிப்பதற்கு முன்பு நான் ஒன்று தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று நம்முடைய சபையின் அஜெண்டாவிலுள்ள விஷயங்களை விவாதிப்பதற்கு ஹை கோர்ட் உத்தரவிட்டிருக்கிறதா? அவர்கள் அனுமதி பெற்றுத்தான் விவாதிக்க வேண்டுமா? இந்தச் சபையில் கனம் அங்கத்தினர்களுக்கு பேச உரிமை இருக்கிறது. இந்தச் சபையின் கனம் அங்கத்தினர்களில் ஒருவருக்கு, கோர்ட்டுக்கு வரும்படி நோட்டீஸ் வந்திருக்கிறது. அதைக் கவனிக்க சபாநாயகருக்கு உரிமை இருக்கிறதல்லவா? சபாநாயகருக்கே நோட்டீஸ் வந்திருப்பதாகத் தெரிகிறது. எதைக் கவனிக்கலாம், எதைக் கவனிக்கக் கூடாது என்பதற்கு நம்முடைய சபைக்கு உரிமை இருக்கிறதா என்று தீர்மானிக்கவேண்டும்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்களில் யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டு, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமானால், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் கேட்க வேண்டும். கேள்வி நேரத்திற்கு முன்பு கேட்கக்கூடாது. கேள்வி நேரம் முடிந்த பிறகு ஏதாவது கேட்கவேண்டுமானால் கேளுங்கள். இப்பொழுது தயவு செய்து உட்காருங்கள். சபையின் உரிமை, கௌரவம் இவைகளை என்னால் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : கேள்வி நேரத்தையாவது அவர்கள் அனுமதித்திருக்கிறார்களா?

MR. SPEAKER : கேள்வி நேரத்தை அனுமதிக்க யாருடைய அனுமதியும் எனக்கு வேண்டியதில்லை என்றுதான் நான் சொல்லக்கூடும். யாரும் என்னை நிறுத்தவில்லை. கேள்வி நேரத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, எனக்கு [illegible] உரிமை இருக்கிறது என்று தான் அர்த்தம்.